நீதித்துறை நடுவர் எண். 1நீதிமன்றம்,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு. எஸ். பாக்கியராஜ், B.Sc., B.L.,
நீதித்துறை நடுவர் எண். 1
2025 ம் ஆண்டு செப்டம்பர் 15 –ம் நாள் திங்கட்கிழமை

**M.P.No.12/2025**
**in**
**C.C.No.111/2021**

**வழக்கின் தரப்பினர்களின் பெயர் விவர குறிப்பு**

திருமதி.R.சத்தியபிரியா, 34/2021
க/பெ.சுந்தரவடிவேல்,
க.எண்.15/16, கொத்தனார் சந்து,
டெலிபோன் காலனி,
Y.M.R.பட்டி,
திண்டுக்கல். = மனுதாரர்/எதிரி

//எதிராக //

திரு.M.சரவணக்குமார், 32/2021
த/பெ.முருகன்,
க.எண்.9/25, ரேசன் கடை தெரு,
மேட்டுபட்டி,
பேகம்பூர் போஸ்ட்,
திண்டுக்கல். = எதிர்மனுதாரர்/புகார்தாரர்

மனுதாரர்/எதிரி சார்பாக வழக்குரைஞர் **M/s. M.பாலசந்தர்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் சார்பாக வழக்குரைஞர் **M/s. ரகுராமன்** அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதமும் கேட்டும் ஆவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யக்கோரி 348 BNSS –ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கடந்த 08.07.2025 ம் தேதி புகார்தாரர் முதல் விசாரணை செய்யப்பட்டு பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.7

வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும், எதிர்மனுதாரர்/புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு சில ஆவணங்கள் கிடைக்க பெறாமல் இருந்ததால் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை எனவும், எதிர்மனுதாரர்/புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தால் தான் வழக்கின் உண்மை தன்மை தெரியும் என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, எதிர்மனுதாரர்/புகார்தாரரை, மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பு வாதம்**

எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என வாதிடப்பட்டது.

**3) தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

இவ்வழக்கில் கடந்த 08.07.2025 அன்று புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், 15.10.2025 ம் தேதி தீர்ப்புரைக்காக வகை செய்யப்பட்ட நிலையில் கடந்த 14.10.2025 ம் பு.சா.1 குறுக்கு விசாரணைக்கென மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுகொள்ளத்தக்கதாக இல்லை. இருப்பினும் இயற்கை நீதி கோட்பாட்டின்படி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் இம்மனு பின்வரும் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/எதிரி தரப்பில் பு.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகும் அன்றையதினம் மேற்கொண்டு வேறு தேதிகளுக்கு ஒத்திவைக்க கோராமல் குறுக்கு விசாரணையை முழுவதும் செய்து முடிக்க வேண்டும் மற்றும் செலவு தொகையாக ரூ.10,000(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) த்தை புகார்தாரர் ஆஜராகும் அன்று அவருக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக இம்மனுவானது நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இன்று **15.10.2025** அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.15 19:15:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

1. மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் எதுவும் இல்லை.
2. எதிர் மனுதாரர்/ புகார்தார் தரப்பு சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.15 19:16:08 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.